
||ஸ்ரீ||

# பரிமுகன் துதி

(ஸ்வாமி தேஸிகன் அருளிச்செய்த ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம்)

தமிழாக்கம் : பொய்கையடியான்



அன்புள்ள பக்தர்களுக்கு,

அடியேன், பொய்கையடியானின் நமஸ்காரங்கள். இந்தக்கலி-யுகத்தில் கவலை, துன்பம் இல்லாத மனிதர்களே இல்லை எனலாம். பணக்கஷ்டம், உத்யோகம் திருமணம், படிப்பு, விபத்து என்று ஏதாவது ஒரு கவலையினிடையே தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

மக்களும் எதைத்தின்றால் பித்தம் தெளியுமென்ற நிலையில் யார்-யாரையோ, எதைஎதையோ தேடி அலைந்து பின்பு ஏமாறுகின்றனர். அவனையன்றி வேறொருவராலும் நம் குறைகளைத்தீர்க்க முடியாது. அதற்கு அவன் ஸ்லோகங்களைச்சொல்லி துதிப்பதே சிறந்தது. ஆனால் அவையெல்லாம் பெரும்பாலும் வடமொழியிலேயே இருக்கின்றன. வடமொழிப் புலமை குறைந்து வரும் இந்நாளில் அவற்றைக்கற்றுத்தருபவர்களும்குறைவு. ஸ்லோகங்களைப்பிழையின்றிச் சொன்னால்தான் பலன் கிட்டும் . இவற்றை மனதினில் கொண்டே எம்பெருமான் அருளாலும், அடியேனுடைய ஆச்சார்யன் அநுக்கிரத்தாலும் ஸ்வாமி தேஸிகன் அருளிச்செய்த ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி, கோதாஸ்துதி ஆகியவற்றை அவற்றின் புனிதமும், அர்த்தமும் சிதையாமல் தமிழ் படுத்தி அவை புத்தகமாக வெளிவந்து சிறந்த முறையில் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றது. ஸ்வாமிகளின் தயாசதகமும் புத்தகவடிவில் வர இருக்கின்றது,என்பதனைமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது, படிக்கும் குழந்தைகளுக்காகவும், நம் அறிவை வளர்த்துக்-கொள்வதற்கு உதவும் பொருட்டும், அவருடைய ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரத்தைத் தமிழ்படுத்தி கொடுத்து இருக்கிறேன். இதனை நீங்களும்படித்து,உங்கள்குழந்தைகளையும்கற்கச் சொல்லுங்கள்ங்கள். பிழையிருந்தால் மன்னித்தருள வேண்டுகின்றேன் .

தாஸன்,

பொய்கையடியான்.

# பரிமுகன் துதி

.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।

வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ॥

வெள்ளைப் படிகமணி போன்ற திருமேனியுடன்,

ஞானம், ஆநந்தம் இவற்றின் சிறந்த வடிவுடன் ।

கொள்ளைகொள்ளும் அழகுடைய அப்பரிமுகனை,

ஞாலம் முழுவதும் வணங்கி வழிபடுகின்றது ॥ 1.

ஹலஹல என்ற சிறந்த ஒலியுடன் கூடிய,

பரிமுகத்துடன் தோன்றுமந்த எம்பெருமானை ।

பலபல வேதாந்தக்கருத்துக்களை வெளியிட்ட,

பெரியதிருவுடன் கூடியவனை துதிப்போம் ॥ 2.

ஸாம, ரிக், யஜுர் வேதங்கள் அனைத்தின்,

தொகுதிப் பொருளின் உறைவிடமானவனின் ।

சேமத்தையளிக்கும் கனைப்பொலியானது,

தகுதியற்றவரின் மனஇருளை ஒழிக்கட்டும் ॥ 3.

கீழ்வெளுத்தால் இருள் மடிவதே போன்று,

புரவியின் முகத்துடன் அவதரித்த பெருமான், ।

ஆழ்கல்வியால் ஞான ஒளியை தந்திடுமவன்,

பரவாஸுதேவனாய் தோன்றி அருளட்டும் ॥ 4.

ஞானமயமான திருவுருவம் கொண்டவனாய்,
பரிவுடன் ஞானத்தையருளும் கருணைக்கடலை ।
ஞாலத்திலுள்ள உயிர்களுக்கு அடைக்கலமருளும்,
பரிமுகப் பெருமாளை அடியேன் சரணடைகிறேன் ॥ 5.

வேத,வேதாந்தகளின் விரிவுரைகளால் இன்றளவும்,
அறியமுடியாது இருக்கும் உன்தன் பெருமைகளை ।
நாத! துதிப்பதற்குத் இன்றுதுணிந்த இந்த அடியேனை,
அறியாச்சிறுவனென கருணையுடன் அருள்வீராக ॥ 6.

தென்திசையை நோக்கி அமர்ந்த முக்கண்ணனும்,
குமுதமலரில் அமர்ந்த நான்முகன் மனைவியும் ।
உன்சக்தியின் சிறுதிவலைகளின் உதவியினால்,
அமுதம்போன்ற படைப்புகளை அள்ளித்தந்தனர் ॥ 7.

மறைத்துவைக்கபட்ட மறைகள் நான்கினையும்,
அந்த அஸுரர்களிடமிருந்து மீண்டும் மீட்டுவந்து ।
மறைந்தஞாநத்தை நான்முகனும் பெற்றுமகிழ்ந்து,
மந்தநிலையிலிருந்து மீட்க உதவிபுரிந்தவன் நீயே ॥ 8.

தேவகுருவான அந்த பிரஹஸ்பதியின் மனம்,
குலையாமல் காத்து நல்மார்கத்தில் செலுத்தி ।
தேவலோகத்தில் இந்திரனின் ஆட்சியென்றும்,
நிலையாக இருந்திட அருள் புரிகின்றவனே ॥ 9.